புதுச்சேரி அரசு
பள்ளிக் கல்வி இயக்ககம்
*****

நாள் : 31-01-2017

# செய்திக் குறிப்பு

உத்தராகண்ட் மாநிலம், டேராடூனில் அமைந்துள்ள இந்திய தேசிய இராணுவ கல்லூரியில் எட்டாம் வகுப்பில் சேர்வதற்கான விண்ணப்பத்தை (ஆண்கள் மட்டும்) 31-03-2017 க்குள் விண்ணப்பிக்கலாம்.

நுழைவுத் தேர்வு எழுதும் மாணவருக்கு 01-01-2018 அன்று 11 ½ வயதுக்குக் குறையாமலும், 13 வயது பூர்த்தியாகாமலும் இருத்தல் வேண்டும். அதாவது 02-01-2005 க்கு முன்னரும் 01-07-2006-க்கு பின்னரும் பிறந்திருக்கக் கூடாது. மாணவர்கள் 01-01-2018-ல் இக்கல்லூரியில் சேரும்பொழுது ஏழாம் வகுப்பு பயிலுபவராக அல்லது தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

## மாணவர்களைத் தேர்வு செய்யும் முறை

- 01-06-2017 அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை ஆங்கிலத் தேர்வும், அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.30 மணி வரை கணிதத் தேர்வும் நடைபெறும்.
- 02-06-2017 அன்று காலை 10.00 மணி முதல் 11.00 மணிவரை பொது அறிவுத் தேர்வு நடைபெறும் (மேற்கண்ட கணிதம் மற்றும் பொது அறிவுத் தேர்வுகளை ஆங்கிலம் அல்லது ஹிந்தி மொழியில் எழுதலாம்)
- எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வு 10-10-2017 அன்று நடைபெறும்.
- நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதம் செப்டம்பர் மாத ஆரம்பத்தில் மாணவர்களுக்கு அனுப்பப்படும்.
- நேர்முகத் தேர்விற்குப்பின் தேர்வு செய்யப்படும் மாணவர்கள், தேர்வு செய்யப்பட்ட இராணுவ மருத்துவமனைகளில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மேலும் மருத்துவ சோதனை சேர்க்கையின் ஓர் அங்கமே தவிர சேர்க்கையின் இறுதி கட்டம் அல்ல என்பதை அறியவும்.

## தேர்வு மையம்

புதுச்சேரி யூனியன் பிரதேச மாணவர்களுக்கு, புதுச்சேரியில் மேற்குறித்த தேதிகளில் எழுத்துத் தேர்வுகள் நடைபெறும். தேர்வு மையம் குறித்த தகவல் மாணவர்களுக்கு இணை இயக்குநர் அலுவலகத் தேர்வுப்பிரிவால் அஞ்சல் வழி மூலம் அறிவிக்கப்படும்.

## விண்ணப்பங்கள் பெற்றிட

விண்ணப்பப் படிவத்தை பதிவு விரைவு அஞ்சல் மூலம் பெற்றிட, தெளிவான அஞ்சல் குறியீட்டு எண் உள்ள விலாசம் மற்றும் தொடர்பு எண் ஆகியவற்றுடன் கூடிய கோரிக்கை மனுவுடன், "THE COMMANDANT RIMC DEHRADUN", DRAWEE BRANCH, STATE BANK OF INDIA, TEL BHAVAN, DEHRADUN,(BANK CODE-01576), UTTARAKHAND. கிளையில் மாற்றத்தக்க, பொதுப்பிரிவினர் ரூ.550/- தொகைக்கும், அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினர் அதற்குண்டான சாதி சான்றிதழுடன் ரூ.505/- தொகைக்கும் கேட்பு வரைவோலை (Account Payee Bank Demand Draft) மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

THE COMMANDANT,
RASHTRIYA INDIAN MILITARY COLLEGE,
GARHI CANTT.,
DEHRADUN,
UTTARAKHAND - 248 003.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், கீழ்காணும் முகவரிக்கு 31-03-2017 க்குள் வந்துசேர வேண்டும்.

**இணை இயக்குநர்**
**இரண்டாம் தளம், அ - அடுக்ககம்**
**பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு கல்வி வளாகம்,**
**அண்ணா நகர், புதுச்சேரி 605 005.**

(ல. குமார்)
இயக்குநர் (பள்ளிக் கல்வி)

இந்த செய்திக் குறிப்பினை தங்கள் நாளேட்டில் / தொலைக்காட்சியில் வெளியிட / ஒளிபரப்ப அன்போடு வேண்டுகிறேன்.

(ல. குமார்)
இயக்குநர் (பள்ளிக் கல்வி)